Registered as a Newspaper in Ceylon

விலை சதம்

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
| --- | --- | --- |
| | இந்தியா — இலங்கை | |
| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 29 ஆம் நாள் ரம்ழான் பிறை 8 (12-1-65) செவ்வாய்க்கிழமை இதழ் 334

# ஜே. ஆர்., பெர்னுர்ட் போட்டியின்றித் தெரிவு

## யு. என். பி., இடதுசாரி ஆதரவாளர் கொண்டாட்டம்

கொழும்பு, திங்கள்

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பெர்னுட் சொய்சாவும் பார்லிமெண்டுக்குப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர். 1947ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பின் அதுவும் ஒரு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இருவரும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டது இதுவேமுதல்தடவையாகும்.

சுதந்திர இலங்கையின் ஆருவது பார்லிமெண்டுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக இவ்வருடம் மார்ச் மாதம் 22-ந் திகதி நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் இன்று தங்கள் அபேட்சா பத்திரங்களைத் தாக்கல்செய்தனர். கொழும்பு தெற்குத் தொகுதியில் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன (யு என் பி) வும் திரு. பெர்னுட் சொய்சா (ல ச ச) வும் மட்டுமே அபேட்சா பத்திரங்களைத் தாக்கல் செய்திருந்தனர். சென்ற பார்லிமெண்டிற்கு இவர்கள் இருவருமே தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

அபேட்சாபத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட கொழும்பு ரெஜிஸ்டிரார் காரியாலயத்தின்முன் திரண்டிருந்த பெருந்தொகையான மக்கள் முன் திரு ஜே ஆர் ஜயவர்த்தனவும் திரு பெர்னுர்ட் சொய்சாவும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இதன்பின் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன தமது ஆதரவாளர் மத்தியிலும் திரு பெர்னுர்ட் சொய்சா தமது ஆதரவாளர் மத்தியிலும் உரைநிகழ்த்தினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## 494 அபேட்சகர்கள் தேர்தலில் போட்டி

கொழும்பு, திங்கள்

பொதுத் தேர்தலில் போட்டியிடும் சுமார் 494 அபேட்சகர்கள் நாடு முழுவதிலுமுள்ள 32 நிலையங்களில் இன்று தமது அபேட்சா பத்திரங்களைத்தாக்கல் செய்தனர்.



கொழும்புக் கச்சேரியில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அத்தனகலைத் தொகுதியில் தாம் போட்டியிடுவதற்கான தமது அபேட்சா பத்திரங்களைத் தாக்கல் செய்தார். கொழும்புக் கச்சேரி முன்னும் ரிஜிஸ்டிரார் ஜெனரல் காரியாலயத்தின் முன்னும் பெருந்தொகையான மக்கள் திரண்டிருந்தனர். அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட சகல நிலையங்கள் முன்னும் திரண்டிருந்த ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பெருமளவில் பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இரு தொகுதிகளில் தமிழரசு-காங்கிரஸ் நேரடிப் போட்டி

### காங்கேசன்துறையில் இருபிரிவு கம்யூனிஸ்டுகளும் போட்டியிடுகின்றனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினெரு தொகுதிகளிலும் போட்டியிடும் அபேட்சகர்கள் நேற்று நண்பகல் யாழ்ப்பாணக் கச்சேரியிலும், மாநகர சபையிலும் தமது அபேட்சா பத்திரங்களைத் தாக்கல்செய்தனர்.

### எஸ். ஜே. வி.யுடன் நால்வர் போட்டி

காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் நால்வர் போட்டியிடுகின்றனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆதரவில் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனும், புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் சார்பில் திரு. வி. காராளசிங்கமும், கம்யூனிஸ்ட் கட்சி (சண்முகதாசன் கோஷ்டி) சார்பில் டாக்டர் வி. சீனிவாசகமும், கம்யூனிஸ்ட் கட்சி (கெனமன் கோஷ்டி) சார்பில் திரு. கே. வைகுந்தவாசனும் போட்டியிடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் தமிழரசுக்கட்சிஅபேட்சகர் திரு. சி. சே. மார்ட்டினும், சுயேச்சை அபேட்சகர் திரு. அல்பிரட் துரையப்பாவும் போட்டியிடுகின்றனர்.

### தமிழரசு—காங்கிரஸ் நேரடிப்போட்டி

சாவகச்சேரித் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. வி. என். நவரத்தினமும், காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தமும் போட்டியிடுகின்றனர். ஊர்காவற்றுறைத் தொகுதியிலும் தமிழரசு அபேட்சகர் திரு. வி. நவரத்தினமும் காங்கிரஸ் அபேட்சகர் திரு என். சி சிவஞானமும் நேரடியாகப் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் கட்டியிருந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. வி. ஜெயவீந்திரன் போட்டிக்கு நிற்கவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' சூருவளி நிதி

## டாக்டர் சம்பந்தர் ரூ. 500 அன்பளிப்பு

சூருவளியினுல் பாதிக்கப்பட்டுத் துன்பமுறும் மக்களுக்கு உதவியளிக்குமுகமாக "ஈழநாடு" 'சூருவளி கஷ்டநிவாரண நிதிக்கு மூளாய் ஆஸ்பத்திரி டாக்டர் என். சி. சம்பந்தர் 500 ரூபாய் அளித்துள்ளார். வல்வெட்டிக் கிராமத்தில் இந்நிதிக்கு 245 ரூபாய் சேர்த்து அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல்வரை 'ஈழநாடு' சூருவளி கஷ்ட நிவாரண நிதிக்கு 12,428 ரூபாய் 42 சதம் சேர்ந்துள்ளது. இத்தொகை தவிர அரிசி, துணி மற்றும் பொருள்களும் கிடைத்துள்ளன.

துன்பமுறும் மக்களுக்கு உதவியளிக்க விரும்புவோர்

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்கள் அவ்வப்போது 'ஈழநாடு'பத்திரிகையில் வெளியிடப்படும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## அபேட்சகர்களை தோளில் சுமந்து சென்றனர்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னுல் பெருந்திரளான மக்கள் வெய்யிலையும் பொருட்படுத்தாது திரண்டுநின்றனர். அபேட்சா பத்திரங்களைத்தாக்கல் செய்தபின் பிற்பகல் 1-40 மணியளவில் திரு. சு ஸ்ரீபாஸ்கரன், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் முதலில் கச்சேரியை விட்டு வெளியே வந்தனர். கச்சேரியிலிருந்து முதலில் வெளிவந்த இவர்களைக் கண்டதும் அவர்களது ஆதரவாளர் கோஷமிட்டு மலர்மாலைகள் சூட்டினர். அவர்களைத் தோளிற் சுமந்து சிறிதுதூரம் ஊர்வலமாகச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் முன்னுள் எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனவாக்கு

ஒரே ஒரு கடவுளே உண்டென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம். வெவ்வேறு மதங்களுக்கும் வெவ்வேறு கடவுளில்லை. நாமெல்லோரும் அந்த ஒரே கடவுளின் குழந்தைகளே. இதை நினைத்தாலே நம்மிடையே ஒற்றுமையும் அன்பும் ஏற்பட முடியும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 29 உ (12-1-65)

## ஆனையிறவு தடையை நீக்குக

யாழ்ப்பாணத்தில் விளையும் வெங்காயத்தை அந்தர் ஒன்றுக்கு 31 ரூபாய்ப்படி விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் விலைக்குப் பெற்றுக் கொள்ளச் செய்யவேண்டுமென்றும் இல்லையேல் ஆனையிறவுத்தடையை நீக்கவேண்டுமென்றும் தீவுப்பகுதி விவசாயிகள் சார்பாக ஒரு தூதுகோஷ்டி யாழ்ப்பாண அரசாங்க அதிபரைப் பேட்டிகண்டு கேட்டுள்ளது. இந்த நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கம் இனியுந் தாமதியாது உடன் செவிசாய்க்க வேண்டும்.

சமீபத்தில் வீசிய புயலினால் வெங்காயப்பயிர் சேதமடைந்துள்ளதாகவும் இதனால் வெங்காயம் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டதாம். இதைத் தொடர்ந்து தீவுப்பகுதியில் வெங்காயம் அதிகம் இருப்பதாகவும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்றும் தீவுப்பகுதி விவசாயிகள் தெரிவித்து அரசாங்கப் பிரகாரப்படி அந்தருக்கு 31 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மூன்று லட்சம் அந்தர் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. புயல் வீசியபோதிலும் வெள்ளம் ஏற்படாததால் வெங்காயப்பயிருக்கு அதிகசேதம் ஏற்படவில்லையென்று விளைபொருள் உற்பத்தியாளர் சமாஜம் தெரிவிக்கிறது. வெங்காயம் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்கவே உத்தரவாத விலைத் திட்டம் கொண்டு வரப்பட்டதுடன் ஆனையிறவுத்தடையும் கொண்டுவரப்பட்டதாம். 167 சங்கங்கள் வடபகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க சமாஜத்தில் அங்கம் வகிக்கின்றன. பொதுச்சபையில் தீர்மானப்படியேதான் ஆனையிறவுத் தடையும் கொண்டு வரப்பட்டிருக்கிறதாகக் கூறப்படுகிறது. புதிய நிலைமையைக் கருதி இதைப் பற்றி சமாஜம் உடன் புனராலோசனை செய்யக் கடமைப்பட்டுள்ளது. புகையிலை போன்ற பணம் கொடுக்கும் பயிர்களைச் செய்கை பண்ணுவதை விடுத்து உணவுப் பயிரான வெங்காயச் செய்கை பண்ணும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியது அரசாங்கம், விளைபொருள் உற்பத்திச் சங்கம் இவற்றின் கடமையாகும். தரகர் தொல்லையிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றவே அரசாங்கம் உத்தரவாதவிலைத் திட்டம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும் பல சங்கங்களும் விவசாயிகளை ஏமாற்றுகின்றனவென்பதும் பகிரங்க இரகசியம்.

இந்நிலையில் தீவுப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை அரசாங்கம் மட்டுமின்றி விளைபொருள் சங்கங்களும் அனுதாபத்துடன் ஆராய்ந்து அவர்களுக்கு வீண் சங்கடமளிக்காமல் அவர்களுக்கு ஊக்கமளிக்க முன்வர வேண்டும். ஆனையிறவுத்தடையை நீக்குவதுபற்றி உடன் புனராலோசனை செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றே நம்புகிறோம்.

## வைகுந்த ஏகாதசி

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 13-ம் திகதி புதன்கிழமை வரும் ஏகாதசியை முன்னிட்டு வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் காலை 5 மணிக்குக் கூபூசையும் தேவை முதல் ஆதமூர்த்தியின் எழுந்தருளலும் இடம்பெறும். அன்று மாலை 6 மணிக்கு பூசை அதன்பின் ஆதிமூர்த்தி எழுந்தருளுவர். இரவு 7 மணிக்கு பஜனை. 9 மணிக்கு மாவிட்டபுரம் திரு வே. க. மயில்வாகனம் ஆழ்வார் "சீதா கல்யாணமும் ஸ்ரீ ராமாயணமும்" என்னும் பொருள்பற்றி கதாகாலட்சேபம் செய்வார். அடுத்தநாள் வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பூசையும் ஆதிமூர்த்தியின் எழுந்தருளலும் இடம்பெறும்.

ஜெயந்திநகர் மகாதேவ ஆசிரமத்தில் புதன்கிழமை இரவு பூசாராதனைகள், நாம பஜனை, பக்திப்பாடல், சொற்பொழிவுகள் நடைபெறும். "ஆண்டாள் சரிதை" பற்றி புலவர் செல்வி விசாலாட்சி அம்மையாரும் "பக்தி மார்க்கம்" பற்றி திரு ந. முத்தையாவும் சொற்பொழிவாற்றுவார்.

## 'மலைக்கொழுந்து' வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

டாக்டர் சிவஞானசுந்தரம் எழுதிய 'மலைக்கொழுந்து' நாவல் வெளியீட்டுவிழா இம்மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் வித்துவான் பொன் முத்துக்குமாரன் தலைமையில் நடைபெறுகிறது. திருமதி இ. ஆனந்தகுமாரசாமி, திரு. கா. சிவத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## இருவருக்கு காயம்

இரத்தினபுரி, திங்கள்

தண்ணீர் எடுக்கும் கிணற்றடியில் ஏற்பட்ட தகராறின் காரணமாக இரண்டு குடும்பங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக கந்தசாமியும் அவரது மனைவியான தெய்வானையும் குத்துக் காயங்களுடன் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் ஜுண்ட்பெரேரா விசாரணையின்பின்னர் சந்தேக நபர்களான கோவிந்தசாமி, செல்லம்மா, பாக்கியம் என்பவர்களை கைதுசெய்துள்ளார்.

## அமெரிக்க – இலங்கையர் சங்கம் அங்குரார்ப்பணம்

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க-இலங்கையர் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க நூல்நிலையத்தை மூடிவிடாது தொடர்ந்து நடத்துவதற்காகவே இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலய கலாசாரப் பிரசாரகர் டாக்டர் ஆண்ட இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாண அமெரிக்க நூல்நிலையத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு வருடமொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் செலவாகுமென டாக்டர் ஆண்ட் குறிப்பிட்டார். பிரிட்டிஷ் கவுன்சில் உதவியுடன் அமெரிக்க தூதுவராலயம் வருடமொன்றுக்கு 7 ஆயிரம் ரூபாவை வழங்குமெனக்கூறிய ஆண்ட் மாதந்தோறும் படக்காட்சிகள் நடத்தி பணம் சேர்க்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தேவைப்படும் 5 ஆயிரம் ரூபாவையும் அமெரிக்க-இலங்கையர் சங்க உறுப்பினர்கள் சந்தாத் தொகை மூலம் வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராக திரு ஜே. பி. துரைரத்தினமும், செயலாளராக திரு. எம். வைத்திலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிவசுந்தரம் வாபஸானார்

கிளிநொச்சித் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் கட்சிசார்பில் போட்டியிடவிருந்த திரு ஏ. சிவசுந்தரம் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளார். வாபஸ்பெற்றதற்குரிய காரணமென்ன என்று "ஈழநாடு" நிருபர் விசாரித்தபொழுது தமிழர்கள் பலவிதத்திலும் கஷ்டப்பட்டு நெருக்கடியிலிருக்கும் இத்தருணத்தில் தாம் தேர்தலில் குதித்து போட்டியிட விரும்பவில்லையென்றும் திரு. குமாரசாமிக்கு தமது முழு ஆதரவை அளிக்கும்பொருட்டே தாம் போட்டியிலிருந்து வாபஸ்பெற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

## வேலை நிறுத்தம் நீடிப்பு

கொழும்பு, திங்கள்

டயர் கூட்டுஸ்தாபன தொழிலாளர் சங்கக் காரியதரிசி விடுத்த அறிக்கையொன்றில் இலங்கை டயர் கூட்டுஸ்தாபனத்தின் தலைமைக்காரியாலயத்திலும் தொழிற்சாலைப் பகுதியிலும் தங்கள் அங்கத்தவர்கள் வேலைநிறுத்தம் செய்தது காரணமாக வேலைகள் யாவும் ஸ்தம்பித்து விட்டன என்று தெரிவித்துள்ளார்.

இந்தவேலை நிறுத்தம் இரண்டாவது கிழமையாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. இலங்கைடயர் கூட்டுஸ்தாபனத்தின் தலைவருக்கும், வேலைநிறுத்தம் செய்யும் சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எதுவித பலனையும் அளிக்கவில்லை என்று சங்கக் காரியதரிசியின் அறிக்கை மேலும் கூறுகின்றது.

(5 ம் கலந் தொடர்ச்சி)

(ஆனால் சீனி சலக்காது) மல்வித் கண்ணீர் தந்தனர்.

அழிந்த வீடுகளுக்கெல்லாம் அரசாங்கம் உதவிப்பணம் கொடுக்கத் திட்டம் போட்டுள்ளதெனினும், இந்த விடுதிக்கு உதவி எதுவும் கிடைக்காதாம். இந்த நல்ல ஸ்தாபனங்களை ஏன் அரசாங்கம் புறக்கணிக்கவேண்டுமென்று தெரியவில்லை. மலைநாடு முதலிய பல பகுதிகளிலிருந்து திக்கற்ற சைவ அநாதைப் பிள்ளைகள் இங்கு வளர்ந்து வருகிறார்கள். அரசாங்கத்தின் முடிவு எப்படியாயினும் இந்த ஸ்தாபனத்துக்குக் கருணைமிக்க பொதுமக்களின் உதவி அதிகம் கிடைக்கவேண்டும். முன்னைவிடப் பலமான, வசதியான அறைகள் கட்ட மக்களின் உதவி தாராளமாகக் கிடைக்குமென்றே மனப்பூர்வமாக நம்புகிறேன்.

* * *

சென்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தையுள்ளால், உற்றதோர் நோய்களைந்திவ்வுலகமெல்லாங் காட்டுவான் உத்தமனுளேதாதெல்லாம், கற்றதோர் நூலினன் களிறு சென்றுங் கழிப்பாலை மேய கபாலபணர், மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க வழிவைத்தாரே

— அப்பர் சுவாமிகள்

## நடைபஜனை மகா ஊர்வலம்

மாவிட்டபுரம், செவ்

இணுவை தியாகசத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தினரின் உத்தராயண புண்ணிய கால நடைபஜனை மகா ஊர்வலம் தை பொங்கலன்று மாலை 3 மணியளவில் இணுவை சிவகாமசுந்தரிசந்நிதியிலிருந்து ஆரம்பமாகி கரைக்குளம் ஈழத்துச்சிதம்பரசிவன் சந்நிதிக்குச் செல்வசந்நிதி கே. கே. எஸ். வீதி வழியாக பெரியமணல் சடையாளி வைரவர் மூலஸ்தானத்தைத் தரிசித்து அவ்விடம் பஜனையை முடிக்குமென்றும் பிற்பகல் 2-30 மணிக்கு பஜனை ஆரம்பமாகி கிழக்கு வீதிவழியாக இந்துக்கல்லூரி வீதி, சிந்தாமணி சிவன் பிள்ளையார் சீனி நாகபூசணி மருதடிப் பிள்ளையார் கதுமலை ஈஞ்சடி வைரவர் இணுவை பரராசசேகரப் பிள்ளையார் கந்தசுவாமி சிவகாமசுந்தரிசந்நிதியை வந்தடையும்.

## 90 வயதில் தற்கொலை

மாத்தறை, திங்கள்

90 வயதுடைய எம். ஏச். விலியம் என்பவர் வீட்டின் மரமொன்றில் சுருக்கிட்டு தற்கொலை செய்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

இறந்தவர் வாதநோயினால் பீடிக்கப்பட்டு பலகாலம் வாழ்ந்து வந்தார் என்று மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

## புதையுண்டு கிடந்த சடலம்

புத்தளம், திங்கள்

தமது தந்தையை கடந்த இரு வாரகாலமாகக் காணவில்லையென்று மதுரங்குளியைச் சேர்ந்த கே. றிச்சார்ட் பெர்னாண்டோ என்பவர் பொலிசாருக்கு அறிவித்திருந்தார்.

இந்தப் புகார் கிடைத்த சில நாட்களின்பின்னர் குறிப்பிட்ட நபர் கட்டுக் கொல்லைப் பட்டு மரமொன்றுக்குக் கீழ் புதைக்கப்பட்டிருப்பதாக சார்ஜன்ட் பெர்னாண்டோவுக்கு தகவல் கிடைத்திருந்தது.

புத்தளம் சப் இன்ஸ்பெக்டர் ஜயவர்த்தன, இறந்த நபரின் சடலத்தை கைப்பற்றியதுடன் கே. றிச்சார்ட் பெர்னாண்டோவையும் அவரது தாயார் அக்னேஸ் பெர்னாண்டோவையும் கைதுசெய்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

சென்ற ஞாயிறன்று சில நண்பர்களுடன் கிளிநொச்சி, தர்மபுரம், உருத்திரபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தேன். சூறாவளி செய்துள்ள கொடுமையை நேரில் பார்க்கத்தான் போனோம். போகும் வழியில் தென்னை முதலிய சில மரங்கள் விழுந்து கிடந்தன. தந்திமரங்கள் ஒருபக்கமாகச் சாய்ந்திருந்தன. ஆனால் ஒரு பனைமரம்கூட விழுந்து கிடந்ததைப் பார்க்கவில்லை.

ராமேசுவரம் பகுதியிலே பெரிய பெரிய மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டிருக்கையில், அங்கு ஒரு பனைக்கும் சேதமில்லையாம். யாழ்ப்பாணத்தின் தேசிய விருட்சம் பனைமரந்தான் ஏன் நம் பனையை மட்டும் சூறாவளி ஒன்றும் செய்யவில்லை! அடிமுதல் நுனிவரையில் அது பலம் பொருந்தது என்றும், தலைக்கனம் அதற்கு இல்லை என்றும் ஓர் அன்பர் விளக்குகின்றார். காரணம் எதுவாயினும் இந்தப் பெருஞ் சோதனைக்குத் தப்பிய பனையைப்பற்றி சிறப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள நாம் அதிக பெருமையுடையதுடன், அதிகம் பாசமுடையவரல்லவா?

* * *

மாலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கிருந்த அன்பர் நல்லதம்பியை அழைத்துக்கொண்டு உருத்திரபுரத்திலுள்ள காந்தி சேவா சங்கம் நடத்தும் அனாதை விடுதிக்குச் சென்றுகையில் வழியிலே எண்ணற்ற இளம் தென்னை மரங்கள் குலைகுலையான காய்களுடன் அடியோடு சாய்ந்து அகாலமரணமடைந்துள்ள கண்ணொளிக்காட்சியைக் காணச் சகிக்கவில்லை. நெல்வயல்களில் பயிர்கள் வெகுவாக மழையில்லாமல் நாசமாகிவிட்டன. இரணைமடுவில் இப்போது சிறிது தண்ணீர் இருப்பதால், கால்வாயில் தண்ணீர் வருகிறது. தப்பியுள்ள சிறுபயிர் மூலம் விதை நெல்லாவது கிடைக்கலாமென்று நீர்ப்பாய்ச்சலில் கமக்காரரும் ஈடுபட்டுள்ளனர்.

பல வீடுகளும் கூரைகளை இழந்து வானத்தை நோக்கித் திறந்து கிடக்கின்றன. சுற்றிலும் மரங்கள் விழுந்தும் இங்கு உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படாதது பெரிய ஆச்சரியம். தெய்வாதீனமென்றே கூறவேண்டும். காந்திசேவா சங்கத்தார் வாரிப் பிச்சை எடுத்துக் கட்டியிருந்த இரு பெரிய அறைகளும் பெரிதும் நாசமடைந்ததைக் கண்டேன். அன்று இரவு புயல் பலமாக வீசிக்கொண்டிருக்கையில் அன்பர் வேலாயுதபிள்ளை அந்த அறையில் படுத்திருந்த சுமார் 25 சிறுவர்களையும் எழுப்பி பக்கத்தில் ஒரு குடிசைக்குப் பத்திரமாக மாற்றிவிட்டாராம். குழந்தைகள் வெளியில் சென்ற சில நிமிஷங்களில் அந்த அறைக் கூரைகள் நொருங்கி விழுந்தனவாம்! பெரும் சேதத்திலும்கூட ஒரு தெய்விகக் கருணையைக் காண முடிந்தது.

* * *

அங்குள்ள அனாதைச் சிறுவர்கள் 'வணக்கம்' கூறித் தேவாரங்களைச் சேர்ந்து பாடினர். 'ஈழநாடு' திரட்டிய நிதிக்குக் கிடைத்த சோப், பால், மா முதலியவற்றையும், விநியோகம் செய்தோம். தேவாரம் பாடிய வாய்க்குப் பிஸ்கோத்து கொடுத்தோம். அக்குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

பின்னர் சமையலறை சென்று பார்த்தோம். அந்தக் கூரை ஒரளவு தப்பியது. பிள்ளைகள் சாப்பிடும் அலுமினியத் தட்டுகள் மிகவும் நசுங்கி, குப்பையில் எறியக் கூடியதாக இருந்தது. அக்குழந்தைகள் அதில் எப்படித்தான் சாப்பிடுகிறார்களோ! எங்களுக்கு அன்பு கலந்த

(8-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொண்டர் படையினருக்கு ஆயுதங்கள் வழங்க முடிவு

## உஷார் நிலையில் மலேசியா

### இராணுவ உதவிகளை தொடர்ந்து அனுப்புமாறு பிரிட்டனுக்கு கோரிக்கை

கோலாலம்பூர், ஜன. 11

மலேசியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும்பொருட்டு பிரிட்டனிடமிருந்து மேலும் பல டார்பிடோ படகுகளையும் சுரங்க நீர் மூழ்கிக் கப்பல்களையும் மலேசியா வாங்கிக்கொள்ளும் என்று மலேசிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் அறிவித்துள்ளார்.

**தொண்டர்களுக்கு ஆயுதங்கள்**

மலேசிய கடற்கரைப் பகுதிகளில் காவல்புரியும் தொண்டர் படையினருக்கு போதுமான அளவு ஆயுதங்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறதென்றும் திரு. துன் அப்துல் ரஸாக் தெரிவித்தார்.

"இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பு, பயமுறுத்தல்களுக்கு மலேசியா ஒருபொழுதும் அடிபணியவோ அல்லது இடம் கொடுக்கவோ முடியாது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகிக்கொண்டதைத் தொடர்ந்து அதன் ஆக்கிரமிப்பு எண்ணம் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக மலேசியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. சகல தொண்டர் படைகளையும் தயார் நிலையில் வைத்திருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**இராணுவத்தலைவர்கள் இரகசிய ஆலோசனை**

இந்தோனேஷியாவின் நடவடிக்கைகள் குறித்து மலேசிய உயர்தர இராணுவ தலைவர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர். இத் தலைவர்கள் இன்றும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

**மேலும் சில படகுகள் பிடிபட்டன**

மலேசியாவின் தென் மேற்குப் பகுதியில் நேற்று பதினொரு சிறு படகுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் படகுகளில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் வந்திறங்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மலேசியாவில் பிரவேசித்த இந்தோனேஷிய கொரில்லாக்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நாட்டின் சகல பக்கங்களிலும் ரோந்து வேலைகள் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளன.

## சீன - ஐ. அ. கு. ஒப்பந்தம்

பீகிங், ஜன. 11

சீனமக்கள் குடியரசினதும் ஐக்கிய அரபுக் குடியரசினதும் அரசாங்கங்களிடையிற் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புப்பற்றிய ஒப்பந்தமொன்று பீகிங்கிற் கைச்சாத்திடப்பட்டது.

பிரதமர் சூ-என்-லாயும் உதவிப் பிரதமர் சென்யீயும் கைச்சாத்திடும் வைபவத்திற் பிரசன்னமாயிருந்தனர்.

ஒப்பந்தம், சீன ராஜ்ய மண்டல உதவிப் பிரதமர் போ-ஈ போவினாலும் ஐக்கிய அரபுக் குடியரசின் துணைப் பிரதமமந்திரி அலி ஸப்ரியினாலும் தத்தம் அரசாங்கங்களின் சார்பில் கைச்சாத்திடப்பட்டது.

அண்மையிற் காலாவதியாக உள்ள வியாபார ஒப்பந்தத்தினதும் பணம் செலுத்துதல் ஒப்பந்தத்தினதும் அமுலிலிருக்கும் காலத்தை மூன்று ஆண்டுகள் நீடிப்பதுபற்றிச் சீனாவினதும் ஐ. அ. கு.வினதும் அரசாங்கங்களிடையிற் பரிமாறிக் கொள்ளப்பட்ட குறிப்புகளையும் 1965-ம் ஆண்டில் இரு அரசாங்கங்களுக்குமிடையில் வியாபாரம்பற்றிய ஒரு சம்பிரதாயபூர்வ இணக்கத்தையும் இரு தரப்புகளும் கைச்சாத்திட்டன.

## ஹிந்தியை தேசிய மொழியாக்கியதேன்?

### பக்தவத்சலம் விளக்கம்

கல்கத்தா, ஜன. 11

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் ஹிந்தி மொழி பேசும் காரணத்தினால்தான் ஹிந்தி தேசிய மொழியாக்கப்பட்டது என்று தமிழ்நாடு முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம் நேற்று இங்கு கூறினார்.

கல்கத்தாவிலுள்ள தமிழர்களினால் அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசுகையில் திரு பக்தவத்சலம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

ஹிந்தி தேசிய மொழியாக அமுல்செய்யப்பட்ட பொழுதிலும் அதனால் சிறுபான்மை சமூகத்தினர் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் இம்மொழியை பயில்வதற்கு போதிய அவகாசம் கொடுக்கப்படும். அதே தருணத்தில் இந்த மொழி தெரியாதவர்களின் மீது கட்டாயமாக திணிக்கப்படமாட்டாது" என்றும் திரு பக்தவத்சலம் தெரிவித்தார்.

ஆங்கில மொழியை அகற்றுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆங்கிலத்தை மாற்றுமொழியாக காலவரையறையின்றி வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

## கைதான பலர் விடுவிக்கப்பட்டனர்

### தென்வியட்நாமில் நடவடிக்கை

ஸைகோன், ஜன 11

கடந்தமாதம் இங்கு கைது செய்யப்பட்ட தென்வியட்நாம் உயர் தேசியசபை உறுப்பினர்கள் அனைவரும் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்நாமில் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து கடந்தமாதம் இந்தச்சபை கலைக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தச் சபையின் உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இராணுவத் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கையைத் தொடர்ந்து மேற்கூறிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் கைது செய்யப்பட்ட பல மாணவர்களும் பல அரசியல் தலைவர்களும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

## சுகர்ணோவின் முயற்சி தோல்வியில் முடியும்

### பிரதமர் துங்கு கருத்து

கோலாலம்பூர், ஜன. 11

மற்றுமொரு உலக ஸ்தாபனம் அமைக்கப் போவதாக அதிபர் சுகர்ணோ கூறுவது வெறும் பகற் கனவாகவே முடியும். சுகர்ணோவின் இந்த முயற்சி சிறிதும் பயனளிக்காது என்றும் மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐ. நா.வில் மலேசியா உறுப்பு நாடாகச் சேர்ந்ததால் தாம் விலகிக்கொண்டுவிட்டதாக இந்தோனேஷிய அதிபர் அறிவித்திருக்கிறார். இதன் முடிவுக்கு இது காரணமல்ல. மற்றைய ஓரிரு நாடுகளின் ஆலோசனையைத் தொடர்ந்துதான் இந்தோனேஷியா இந்த முடிவுக்கு வந்திருக்கிறது என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

"ஐ. நா. விலிருந்து விலகி தனியாக ஒரு உலக ஸ்தாபனம் அமைக்கப் போவதாக சுகர்ணோ தெரிவித்திருக்கிறார். இது அவர் கருதுவது போல் அவ்வளவு சுலபமாக கைகூடாது. அவரின் இந்த முயற்சி பெரும் தோல்வியில்தான் முடியும்" என்றும் அவர் கூறினார்.

## சைப்பிரஸில் மீண்டும் சண்டை

நிக்கோஸியா, ஜன 11

சைப்பிரஸில் நேற்று மீண்டும் சண்டை ஆரம்பித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் நெருக்கடி மிகவும் தணிந்திருந்தது.

## வடவியட்நாம் கண்டனம்

பீகிங், ஜன 11

தென்வியட்நாமுக்கு தென் கொரியா 2,000 துருப்புகளை அனுப்பியிருப்பது குறித்து வடக்கு வியட்நாம் கடுமையாக கண்டித்திருக்கிறது.

## அமெரிக்க ஆலோசகர் பலி

சைகோன், ஜன 11

இரண்டு அமெரிக்க ஆலோசகர்களையும் ஆறு தென்வியட்நாம் அரசாங்க துருப்புக்களையும் வியட்காங் கொரில்லாக்கள் கொலைசெய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மற்றுமொரு அமெரிக்க விமானத்தை சீனா சுட்டது

பீகிங், ஜன 11

சீனப் பிராந்தியத்தின்மீது பறந்துசென்ற மற்றுமொரு அமெரிக்க விமானத்தை சீனா சுட்டு வீழ்த்திவிட்டதாக நவ சீன செய்தி ஸ்தாபனம் இன்று அறிவித்தது.

கடந்த நான்குமாத காலத்திற்குள் சீனா மூன்று அமெரிக்க விமானங்களை சுட்டுவீழ்த்தியுள்ளது.

சீன பிராந்தியத்தில் தொடர்ச்சியாக தொல்லை கொடுத்துவந்த காரணத்தினால் இந்த விமானம் சுடப்பட்டதென்று பீகிங் செய்தியொன்று கூறுகிறது.

சீனாவின் இந்த நடவடிக்கை குறித்து அமெரிக்கா உடனடியாக எதுவும் வெளியிடவில்லை.

## அணுகுண்டுகளை தயாரிக்க மாட்டோம்

### ஜப்பான் பிரதமர் அறிவிப்பு

சான்பிரான்ஸிஸ்கோ, ஜன. 11

அணுகுண்டுகளைத் தயாரிக்கும் வல்லமையை ஜப்பான் பெற்றிருந்தபொழுதிலும், அந்தத் துறையில் ஜப்பான் ஒருபொழுதும் ஈடுபடாதென்று ஜப்பான் பிரதமர் திரு. ஸைட்டோ இங்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஆறு தினங்கள் சுற்றுவிஜயம் செய்யும் பொருட்டு ஜப்பான் பிரதமர் இங்கு வந்துள்ளார். விமான நிலையத்தில் அளித்த ஒரு பேட்டியில் தான் அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

சீனா அணுகுண்டு வெடித்ததை வன்மையாகக் கண்டித்த அவர் சீனாவின் இந்த நடவடிக்கை உலக ஐக்கியத்துக்குப் பெரும் சோதனையாக மாறிவிட்டதென்று கூறினார்.

திரு. ஸாட்டோ இன்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸனைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார். சர்வதேசப் பிரச்னைகள் குறித்து அவர்கள் இருவரும் ஆராய்ந்தனர்.

## காங்கிரஸ் முடிவு

துர்க்காபூர், ஜன. 10

துர்க்காபூரில் நடைபெற்ற 69-வது காங்கிரஸ மகாநாடு இன்று முடிவடைந்தது.

வெளிநாட்டு மந்திரி சுவர்ண் சிங் மகாநாட்டில் பேசிய போது இந்தோனேஷியா ஐ. நா விலிருந்து விலகாமல் வற்புறுத்தும்படி சகல நாடுகளையும் கேட்டுக்கொண்டார். மலேசிய நெருக்கடி தென் கிழக்காசியாவில் பதற்ற நிலைமையை தோற்றுவித்திருக்கிறது. உலகின் நம்பிக்கைச் சின்னமாக இருக்கும் ஐ. நா. வை பலவீனப்படுத்தக் கூடாது எனவும் இந்தோனேஷியாவை அவர் கேட்டுக்கொண்டார்.

**கராச்சியில்**

## பாடசாலைகள் திறக்கப்பட்டன

கராச்சி, ஜன 11

கராச்சியில் இன்று மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டன. ஆனால் கல்லூரிகள் எதுவும் திறக்கப்படவில்லை. மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக கடந்த இருமாதங்களாக பாடசாலைகள் கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன.

## கல்லோயா சபை

அம்பாறை, திங்கள்

"லட்சக்கணக்காக செலவிடப்பட்ட கல்லோயா முன்னேற்றச்சபையின் மூலம் பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் 8000 மக்கள் எவ்விதமான பலனையும் பெறவில்லை" என்று டிகமடுல் பௌத்த காங்கிரஸ் சங்கக் காரியதரிசி திரு. [illegible] குறிப்பிட்டார்.

## இடமாற்றங்கள்

துணுக்காய், ஞாயிறு

வட்டக்கச்சி அரசினர் தமிழ் பாடசாலை உதவி ஆசிரியர் எஸ். நடேசன் யோகபுரம் 1-ம் பகுதி தமிழ் வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். கல்விளான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய மாணவ ஆசிரியர் செல்வரத்தினம் மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

•

யோகபுரம் முதலாம்பகுதிக் கொலனி அதிபர் சி. சம்பந்தமூர்த்தி கல்லோயாக் குடியேற்றத்திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு திரு. மாசிலாமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

•

யோகபுரம் இரண்டாம்பகுதி கொலனி அதிபர் திரு. அல்பிரட், பாவற்குளம் இரண்டாம் பகுதிக்கு மாற்றலாகிச் செல்கின்றார். இவரின் இடத்திற்கு திரு. செந்தில்நாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

•

யோகபுரம் முதலாம்பகுதி குடியேற்ற மேற்பார்வையாளராக, யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றிய திரு. இராசரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## காடையரின் கைவரிசை

கொழும்பு, திங்கள்

பம்பலப்பிட்டியில் ஒரு பகுதியில் வசிக்கும் குடியானவர்களை நேற்று பட்டப்பகலில் மூன்று காரில் சென்ற காடையர்கள் தாக்கினர்களாம். அந்த வீட்டின் இரண்டு யன்னல்களையும் பலதளபாடச் சாமான்களையும் அந்தக் காடையர்கள் நாசமாக்கினார்கள் என்றும், சம்பவம் நடைபெற்ற பொழுது அந்த வீட்டிலுள்ள பெண்கள் வீட்டின் அறைகளுக்குள் சென்று கதவுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இரண்டுமணித்தியாலப் பயங்கரப் போராட்டத்தின் பின்னர் பொலிசார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். தாக்கப்பட்ட வீட்டுக்காரர்கள் பயந்து இரண்டு நாட்களாக அந்த வீட்டில் தங்கியிருந்தார்களாம்.

## பாடசாலைகள் ஆரம்பம்

துணுக்காய், ஞாயிறு

கல்விளான், உயிலங்குளம், ஆலங்குளம் ஆகிய பாடசாலைகளைத் தவிர்ந்த மற்ற பாடசாலைகள் யாவும் புதன்கிழமை முதல் ஆரம்பமாகிவிட்டன. சூறாவளியினால் சேதமடைந்த இம் மூன்று பாடசாலைகளும் திருத்தி அமைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சோஷலிஸப் பாதையே தமிழருக்குவிமோசனமளிக்கும்"

## அரியாலைக்கூட்டத்தில் திரு. தர்மரத்தினம் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"சோஷலிஸப் பாதையில் சென்று சிங்கள மக்களுடன் சேர்ந்து நாட்டின் பொருளாதாரநிலையை உயர்த்த முற்பட்டால்தான் தமிழர் தமது உரிமையைப் பெற்று வளமாக வாழமுடியும். இதற்கு வழி செய்யுமுகமாகத் தமிழ்மக்கள் இடதுசாரி அபேட்சகர்களைத் தெரிவுசெய்து அனுப்பவேண்டும்."

இவ்வாறு அரியாலை புதுச் சந்தையில் நல்லூர் தொகுதியில் சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. அ. விஸ்வநாதனை ஆதரிக்குமுகமாக நேற்று மாலை நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. ஆர் ஆர். தர்மரத்தினம் பேசுகையில் கூறினர்.

திரு சி. கா. முத்தையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தர்மரத்தினம் மேலும் பேசியதாவது:

1947ம் வருடத்திலிருந்து இன்றுவரை தமிழரசுக்கட்சியோ . தமிழ்க்காங்கிரஸோ எதுவுமே சாதிக்கவில்லை.

கூட்டரசாங்கம் தமிழ்மக்களது உரிமைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் வீழ்த்தப்பட்டது தமிழ்மக்களுக்குப் பெரும் நஷ்டம்.

தற்போதைய அரசியல்நிலை இலங்கையில் ஒரு முக்கிய கட்டத்தைஅடைந்திருக்கிறது. முதலாளித்துவமா சோஷலிஸமா பலம் கொண்டதென்பதைத் தேர்தல் நிர்ணயிக்கும். மக்கள் நிலைமையை நன்கு ஆராய்ந்து தீர்பளிக்கவேண்டும்.

திரு. விஸ்வநாதன் பேசுகையில் சோஷலிஸப் பாதையில் சென்றால்தான் தமிழர் தமது உரிமைகளைப் பெறலாமென்றும் இடதுசாரிகளுக்கே தமிழர்கள் தமது ஆதரவையளிக்க வேண்டும்" என்றும் தெரிவித்தார். மற்றும் பலர் பேசினர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
James Darren
in
GIDGET GOES
TO ROME
(Scenic color)



ராஜா சினிமா
(சுழிபுரம்)
சி. ஆர். மகாலிங்கம்-ருக்மணி
நடிக்கும்
ஸ்ரீ வள்ளி



மனோகரா (யாழ்ப்பாணம்) போன்: 48 5
6-30க்கும் 9-30க்கும்
பாஸ்பேட் (ஹிந்தி
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
3-30க்கு மட்டும்
NAYOKA and the
TIGER MEN


## வர்த்தக பேச்சுக்கள்

கொழும்பு, திங்கள்

இலங்கை இந்திய அதிகாரிகளுக்கிடையே நடைபெறவிருக்கும் வர்த்தக பேச்சு வார்த்தைகள் இவ்வாரத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வர்த்தக கோஷ்டிக்கு, வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக விநியோக அமைச்ச நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. ஆர். டபிள்யூ. டி' சில்வா தலைமை வகிப்பார். இந்தப் பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பமாகும்.

இந்திய வர்த்தகத் தூது கோஷ்டியினர் இன்று கொழும்பு வந்து சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாணவர் மலர்

"மாணவர் மலர்" பகுதி பொங்கல்தினமான வியாழக்கிழமை 14-ம் திகதி வெளியாகும் "ஈழநாடு" இதழில் பொங்கல் மலராக வெளியாகவிருக்கின்றது. விசேஷ கதை, கட்டுரை, கவிதைகளுடன் கமழவிருக்கும் பொங்கல் மலரை நாளைமறுதினம் எதிர் பாருங்கள்.

## துரிதமான நடவடிக்கைகள்

கொழும்பு, திங்கள்

புயலினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள கமத்தொழில் திட்டங்களுக்கும் மீன்பிடித் தொழில் முதலியவற்றுக்கும் துரிதமான நடவடிக்கை எடுத்து மீண்டும் பழைய நிலைமைக்கு அவற்றைக் கொண்டுவர வேண்டும் என்று உணவு-மீன்பிடி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 300 மீன்பிடிக்கும் இயந்திரப்படகுகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறு உணவு-மீன்பிடி நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா மீன்பிடி அதிகாரி திரு சாம் சில்வாவிற்கு உத்தரவிட்டுள்ளார். இது சம்பந்தமாக மீன்பிடி அதிகாரி மந்திரிசபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் தெரியவருகின்றது.

## பொலிஸார் மீது குற்றச்சாட்டு

அம்பாறை, திங்கள்

டம்மன பொலிஸ் உத்தியோகத்தர்கள் அத்துமீறிக் குடியேற்றக் காணிகளுக்குள் பிரவேசித்து விவசாயம் செய்து வருவதால் தாங்கள் கல்லோயா முன்னேற்றச் சபையின் கட்டளைகளை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாதென்று குடியேற்ற அதிகாரிகள் கல்லோயா சபைத் தலைவர் திரு. எம். டபிள்யூ எல். அபயக்கோனுக்கு தெரிவித்துள்ளார்கள்.

சட்டத்தை பாதுகாக்க வேண்டியவர்கள் இதில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக காணியில் வசித்து வந்தவர்கள் முன்வந்து முறைப்பாடு கொடுப்பதற்கு பயந்துள்ளார்கள் என்றும் குடியேற்ற அதிகாரிகள் கல்லோயா சபைத் தலைவருக்கு மேலும் தெரிவித்துள்ளார்கள்.

## வேலைநிறுத்தப் பயமுறுத்தல்

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த இரண்டு தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாகப் பயமுறுத்தியுள்ளன.

பதவி உயர்வு சம்பந்தமாக இறக்குமதிப் பகுதி ஜெனரல் மனேஜரிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்காவிட்டால் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக இவ்விரு தொழிற்சங்கங்களும் தெரிவித்துள்ளன.

## மூடப்பட்டு கிடக்கும் வாடிவீடு

அம்பாறை, திங்கள்

கல்லோயா சபை பராமரிப்பின் கீழ் இயங்கும் இக்கினியாகலை வாடி வீடு சில காலமாக மூடப்பட்டிருக்கின்றது. பதினறு அறைகள் அடங்கிய இந்த வாடிவீடு இலங்கையில் சிறந்த வாடி வீடாக இருந்ததென்று குறிப்பிடத்தக்கது. மாதாந்தத்தில் இந்த வாடி வீட்டில் [illegible] ரூபா வருமானம் கிடைத்து வந்தது.

கொழும்பில்

## சூறாவளி நிவாரணம்பற்றி அரசாங்க மகாநாடு

கொழும்பு, திங்கள்

புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவி அளிக்கப்படவேண்டுமென்று ஆராய்வதற்கான இன்னோர் மகாநாடு கலாசார சமூக சேவா மந்திரியின் காரியாலயத்தில் ஜனவரி மாதம் 15ந் தேதிகாலை 9-30 மணிக்கு நடைபெறுமெனத் தெரியவருகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்குஎவ்விதமான உதவிகள் வழங்கப்படவேண்டுமென்றும்கிடுகுகள் ஓடுகள், மரங்கள் முதலியன எவ்வாறு கொடுக்கப்படவேண்டும் என்றும் இந்த மகாநாட்டில் ஆராயப்படும்.

யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா, திருக்கோணமலை, கொழும்பு, குருணாகலை, ஆகிய இடங்களின் அரசாங்க அதிபர்களும், காணி அதிகாரியும், சமூகசேவைப் பகுதி அதிபரும் மீன்பிடிப்பகுதி கூட்டு ஸ்தாபனத்தின் தலைவரும் இந்த மகாநாட்டில் சமூகம் கொடுக்கும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

## பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க ஆண்டுவிழாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய ஆண்டுவிழா இம்மாதம் 2-ம் 3 ம் திகதிகளில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நிலையத்தலைவர் திரு. ஆ. மார்ட்டின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து நிலையம் நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

தலைவர் தமது தலைமையுரையில் நிலையம் ஆற்றிய சேவைகளை எடுத்துரைத்து மேலும் முன்னேற்றமடைய எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். உள்ளுராட்சி உதவி ஆணையாளர் பேசுகையில், நிலையம் நல்ல நிலையை அடைந்துள்ளது குறித்து தமது பாராட்டைத் தெரிவித்தார்.

வண. பிதா ஏ. வசன்பேக் ஓ. எம். ஐ., திருவாளர்கள்: த. துரைசிங்கம், அ. போல்ராஜ் ஆகியோரும் உரை நிகழ்தினர்.

நிலையத்தின் வளர்ச்சிக்கு உழைத்த நிலையச் செயலாளர் திரு எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளைக்கு நிலையத்தின் சார்பாக வெள்ளிக்கிண்ணம் ஒன்று பரிசளிக்கப்பட்டது.

நிலையம் நடாத்தியபோட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு:-

**10 மைல் சயிக்கிள் ஓட்டம்**

பி. சிவஞானகிருஷ்ணன் (கொட்டடி சனசமூக நிலையம்) என். மகேந்திரன், எஸ். ஜெகசீலன் (கொய்யாத்தோட்டம்),

**வள்ளம் தாங்கல் போட்டி**

பாடுமீன் கோஷ்டி, புரட்சிக் கோஷ்டி.

**மெதுவான சயிக்கிள் ஓட்டப் போட்டி**

எஸ். செல்வநாயகம்(கொழும்புத்துறை), என். விக்னேஸ்வரன் (அரியாலை சனசமூக நிலையம்), எஸ். தவப்பிரகாசம் (பாடுமீன் கோஷ்டி).

**பேச்சுப்போட்டி**

இராஜகுமார் இராசா (திருநெல்வேலி சனசமூக நிலையம்) க. கதிர்காமநாதன் (பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம்).

**சங்கீதப்போட்டி (கர்நாடகம்)**

மா. கிருஷ்ணவேணி (அரியாலை சனசமூக நிலையம்), இ. சௌதாமினி (அரியாலை, சனசமூக நிலையம்.

**சினிமாப்பாட்டு**

ஆண்கள்: அ. செபஸ்தியாம்பிள்ளை (புரட்சிக்கோஷ்டி) க. கதிர்காமநாதன் (பா. ம. மு. ச. ச. நிலையம்)

பெண்கள்: செ. சிறீமதியம்மா (பா. ம. மு. ச. ச. நி.)

**குழுநடனம்**

அரியாலை சனசமூக நிலையம் (பி. பிரிவு) அரியாலை சனசமூக நிலையம் (ஏ. பிரிவு)

**தனி நடனம்**

செ. சிறீமதியம்மா (பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சமூகநிலையம்).

**நீச்சல் போட்டி**

யோ சிங்கராயர், யே. நெல்சன், மு. கட்டமணி.

**மூன்று சில்லு சயிக்கிள் ஓட்டம்**

செ. றெமிசியஸ் (பாஷையூர் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம்) ஏ விஜயகுமார் (பா ம. மு. ச. ச. நிலையம்)

**விநோத உடை**

கியூபேட், மேரி பீற்றர், க. மிக்கேல்.


2வது வெற்றி மாதம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்
இரவு 6-30, 9-30க்கும்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்

3-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
விஜயா மொடேர்ன் ராஜ்
(மட்டக்களப்பு) (பதுளை) (நீர்கொழும்பு)
14-ந் திகதி தொடக்கம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(ஜெமினி கலர்)



"சியல்"
ரூ. 2-50 விகிதம் தரத்தில்
சிறந்த பேனைக்கள்
கட்டுப்பாட்டு விலையில்
"சியல்" பேனவை உங்களால்
வாங்கமுடியாவிட்டால்,
எங்களிடமிருந்து நேரடியாக ரூ. 2-50
விகிதம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு ஏஜென்சீஸ் லிமிட்.,
(சியல் பேனைக்களுக்கு ஏக விநியோகஸ்தர்கள்)]
2-ம், மாடி நாஷனல் மியூச்சுவல் கட்டடம்
54 2/1, சதாம் வீதி, கொழும்பு-1.
த. பெ. இல: 913 தொலைபேசி: 4213 - 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத் தடையை நீக்குக!
## தீவுப்பகுதி விவசாயிகள் கோரிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

வெங்காயத்தில் உத்தரவாத விலையாகிய ரூந்தல் 31 சதத்திற்கு அரசாங்கம் கட்டாயமாக எடுக்கவேண்டும். அல்லது ஆனிமிறவு தடையை நீக்கி தீவுப் பகுதி வெங்காயம் கொழும்பில் விற்கப்பட அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோரும் தீர்மானமொன்று அண்மையில் நடைபெற்ற தீவுப் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட இலங்கை விவசாய உற்பத்தி ஐக்கியசங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சிவஞானம் இக் கூட்டத்தில் உரையாற்றுகையில், வறட்சியினாலும், சூறாவளியினாலும் வெங்காயச் செய்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் அதன்விலையை குறைப்பதினால் விவசாயிகள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாவார்கள் எனவும், புகையிலைச் செய்கையைக் கைவிட்டு வெங்காயச் செய்கையில் பல விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். இலங்கை முழுவதற்கும் இரண்டு மாதத்திற்குப் போதுமான வெங்காயத்தைத் தீவுப் பகுதி விநியோகம்செய்யக்கூடிய நிலையில் இருப்பதாகவும் கூட்டத்தில் பலர் எடுத்துரைத்தனர்.

உணவு மந்திரியைப் பேட்டி கண்டு நிலைமையை எடுத்துரைத்து தீவுப்பகுதி விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க வழக்கறிஞர் திரு. என். ரி. சிவஞானத்தை [illegible] கேட்டுக்கொண்டதற்கிணங்க விரைவில் அவர் மந்திரியைப் பேட்டிகாண்பார் எனவும் தெரிகிறது.

---

## தனுஷ்கோடி அகதிகள்

புதுடில்லி, ஜன. 11

தனுஷ்கோடி புயல் நிவாரண நிதிக்கு உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் 1001 ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்.

உத்தரபிரதேச முதன் மந்திரி ஸ்ரீமதி சுசேதா கிருபாளினி ரூபா 60,000 அனுப்பியிருக்கிறார்.

---

## பூட்டான் மன்னர்

கல்கத்தா, ஜன. 11

பூட்டான் மன்னரும் இந்திய பிரதமர் சாஸ்திரியும் இன்று இங்கு பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். அதற்கு முன் ராஜதம்பதிகளுடன் பிரதமர் தேநீர் அருந்தினர்.

---

## அணுசக்தி கப்பல் மோதியது

வாஷிங்டன், ஜன. 11

மத்தியதரைக் கடலில் அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி ஒன்று நார்வே சரக்குக்கப்பல் ஒன்றுடன் மோதியதால் சிறிய சேதம் ஏற்பட்டது. ஆள்சேதம் இல்லையென அறிவிக்கப்படுகிறது.

---

## வியட்நாமில் ஆர்ப்பாட்டம்

சைகோன், ஜன. 11

மத்திய வியட்நாமில் மாணவர்கள் 48 மணிநேர வேலை நிறுத்தம் ஆரம்பித்திருக்கிறார்கள். அரசாங்க விரோத ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்த வேலை நிறுத்தம் மற்ற மாகாணங்களுக்கும் பரவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பொலிஸார் நடவடிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

இன்று அதிகாலை தொடக்கம் கணிசமான பொலிசாரின் அதிகாரத்திற்குட்பட்ட முக்கிய சந்திகளில் ரைபிள் தாங்கிய பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர். இன்று பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவிருப்பதால் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் தடுப்பதற்காகவே இவர்கள் முக்கிய சந்திகளில் நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு, புதிய தேர்தல் சட்ட விதிகளுக்கு இணங்க அபேட்சகர்களையும், அபேட்சகர்களின் ஏஜண்டுகளையும் தவிர மற்றவர்களின் வாகனங்களில் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

## பேட்சகர்களை ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே வந்தார். அவருக்கு அவரது ஆதரவாளர்கள் மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

பின்னர் முன்னாள் செனட்டர் திரு. பொ. நாகலிங்கம், வி. நாரானசிங்கம் ஆகியோர், அவரது ஆதரவாளர்களினால் அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் ஆதரவாளர்களினால் மாலையிடப்பட்டு வரவேற்கப்பட்டனர். திரு. அமிர்தலிங்கம் திரு. மார்டின் திரு வி. நவரத்தினம் ஆகியோர் அவர்களது ஆதரவாளர்களினால் தோளில் சுமந்து செல்லப்பட்டனர். பழைய பூங்கா வாசல் வரை சென்றதும் அவர்கள் இறங்கிக்கொண்டனர்.

சனத்திரளைச் சமாளிக்கப் பெருமளவு பொலிசார் கச்சேரியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்தனர். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின் போக்குவரத்து சீராக சுமார் ஒருமணிநேரம் பிடித்தது. நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுமிடத்தில் அபேட்சகர்களும், அவர்களது பெயர்களைப் பிரேரிப்பவர், அனுவதிப்பவர்களுமே அனுமதிக்கப்பட்டனர். தேர்தல் அதிகாரியின் அனுமதி பெற்றவர்கள் மட்டும் வெளிவிறாந்தையில் நிற்க அனுமதிக்கப்பட்டனர்.

---

## ஜே. ஆர். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மத்திய தந்திக் காரியாலயக்கட்டிடத்தில் முன்பாகத் திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் திரு பெர்னாட் சொய்ஸா, சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பீட்டர் கெனமன், கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடும் திரு இஸ்மாயில் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

---

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் மெற்கு ஐக்கிய நாணய சங்க பொதுக் கூட்டம் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. இ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் புதிய உத்தியோகஸ்தர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. ஆறுமுகம், உபதலைவர்: வை. சின்னையா, காரியதரிசி: க. ஆறுமுகம், தனாதிகாரி: மா. [illegible] லிங்கம். நிர்வாகசபையினரும் [illegible] தெரிவு செய்யப்பட்டனர்.

---

## 'பிணம்' வழியில் பிழைத்து எழுந்தது

பூனா, ஜன 1[illegible]

மோசமான சுகவீனத்தால் விபத்தும் சாவும் ஏற்படலாம். ஆனால் பள்ளமும் குழியுமாக கிடந்த மிகமோசமான சாலையின் வழியே வசந்த பாபுராவ் மக்மாரே என்றவரின் பிணத்தை டாக்ஸியில் கொண்டு போனபோது அது ஆடிய ஆட்டத்தில் அவர் உயிர் பிழைத்துவிட்டார்.

இருதய இரத்தக் குழாய்க் கோளாறினால், இறந்துபோன 45 வயதான வசந்தமக்மாரே உயிர் பிழைத்ததை இரண்டு நாட்களாக கவனித்த பிறகு, அவர் நன்றாகப் பிழைத்துவிட்டார் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## வானொலியில் அரசியல் கட்சிகள்

கொழும்பு, திங்கள்

ரேடியோமூலம் தங்கள் வேலைத்திட்டங்களை ஒலிபரப்ப அரசியல் கட்சிகளை அனுமதிப்பது குறித்து ஒலிபரப்பு தகவல் பகுதி பிரதமரின் உத்தரவை எதிர்பார்த்திருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு இச் சலுகை கிடைக்கும் எனத் தெரிகிறது.

---

## வாஷிங்டனில் ஜப். பிரதமர்

டோக்கியோ, ஜன 11

ஜப்பானிய பிரதமர் திரு. ஸாட்டோ இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

---

## சுவாமி பிரணவானந்த சரஸ்வதி

கோலாலம்பூர், ஜன. 11

ரிஷிகேசத்தில் தீட்சை பெற்ற சுவாமி பிரணவானந்த சரஸ்வதி மலேயா வருகை தந்திருப்பதையொட்டி அவருக்கு கோலாலம்பூர் விவேகானந்த தமிழ்ப் பள்ளியில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தப்பட்டது. திரு. ஏ. இராமநாதன் தலைமைவகித்தார்.

கோலாலம்பூர் திவ்விய ஜீவன்சங்கம் உட்பட 18 ஸ்தாபனங்கள் சார்பாக இந்த பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

---

## சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண உதவிக்கு: வல்வெட்டித்துறை கிராமத்தில் சேர்ந்த பணம்:-245 ரூபா விபரம் வருமாறு:

| | |
|---|---|
| சின்னத்தம்பி பொன்னையா | 50 |
| வேலு பிள்ளை கந்தசாமி | 42 |
| இளையதம்பி மயில்வாகனம் | 25 |
| கந்தையா சின்னத்தம்பி | 30 |
| கந்தையா வடிவேலு | 10 |
| நல்லதம்பி கந்தையா | 5 |
| முருகர் கந்தசாமி | 20 |
| சபாபதிப்பிள்ளை நல்லையா | 10 |
| கந்தையா கணபதிப்பிள்ளை | 5 |
| சரவணமுத்து அம்பலத்துரை | 10 |
| ஆறுமுகம் கந்தையா | 10 |
| வ. கணேசர் | 5 |
| வேலுப்பிள்ளைசெல்லத்துரை | 5 |
| ஆறுமுகம் சின்னையா | 10 |
| தம்புத்தம்பி பிள்ளை | 5 |
| அ. பாலு [illegible] | 2 |
| ஏ. கே. சுப்பிரமணியம் | 1 |
| டாக்டர் என். ரி. சம்பந்தன், முளாய் ஐக்கிய வைத்தியசாலை | 500 |
| ஜி. எஸ். அருணம்பலம், ஜூஜவான், கச்சேரி ஒழுங்கை, கண்டிக்குளி | 10 |
| வ. கே. சின்னையா, ரவி வாசா, கரவெட்டி | 15 |
| எஸ். ஜெகதீசன், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை | 5 |
| க. மகாலேவதக் குருக்கள் சுழத்துச் சிதம்பரம், காரைநகர் | 10 |
| ஒரு தமிழன், யாழ்ப்பாணம் | 5 |
| செ. சாரதாமணி, வட்டுக்கோட்டை | 10 |
| [illegible] | 10 |

---

# கட்சிதலைவர்கள்போட்டியிடும் தேர்தல் தொகுதி

கொழும்பு, திங்கள்

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா எட்டியாந்தோட்டைப்பகுதியில் போட்டியிடுவதற்காக தமது அபேட்சா பத்திரத்தைக் தாக்கல்செய்தார்.

கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் அக்குரஸ தொகுதியில்போட்டியிடுகிறார்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு பிலிப் குணவர்த்தன அவிசாவளை தொகுதியில் போட்டியிடுகிறார்.

ஜாதிகவிமுக்தி பெரமுனைத் தலைவர் திரு கே. எம். பி. ராஜரத்தின வெலிமடைத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

திரு வி பி. டி' சில்வா மின்னேரியாத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

32 நிலையங்களில் சுமார் 500 அபேட்சகர்கள் தங்கள் நியமனபத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

பிரதமர் டட்லி சேனநாயக்க டெடிகம தொகுதியிலும், எதிர்க்கட்சித்தலைவர் திரு. டட்லி சேனநாயக்க டெடிகம தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். தமிழரசுக் கட்சித்தலைவர் திரு செல்வநாயகம் காங்கேசன்துறையில் போட்டியிடுகிறார்.

அங்கீகரிக்கப்பட்ட 9 அரசியல் கட்சிகளுக்கு 9 தேர்தல் சின்னங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இதர கட்சிகள், சுயேட்சை ஆகியோருக்கு 30 சின்னங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஷோப்பேயை விலக்குக

லியப்போல்ட்வில், ஜன. 11

ஷோப்பேயைத் தவிர்த்து புதிய காங்கோ மந்திரிசபை ஒன்றை நிறுவவேண்டுமென முன்னாள் காங்கோ பிரதமர் அடூலா கூறியிருக்கிறார்.

---

## விசாரணை கமிஷன்

புதுடில்லி ஜன 11

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வெளியேறுவதைப்பற்றி ஆராய உள்துறை இலாகா விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமித்திருக்கிறது. முன்னாள் சுப்ரிம் கோர்ட் நீதிபதி ஒருவர் இதன் தலைவர்.

---

## ருஷ்யா தயார்

மாஸ்கோ, ஜன 11

ஐ. நா. நிதி நெருக்கடியைத் தீர்க்க அங்கத்தவ நாடுகள் தாமாக முன்வந்து பணம் செலுத்தும் திட்டம் ஒன்றை ஏற்க ருஷ்யா தயாராய் இருப்பதாக பிராவ்டா அறிவித்திருக்கிறது 12 ஆசிய ஆபிரிக்க நாடுகள் இந்த யோசனையைப் தெரிவித்திருந்தன.

---

## புதிய பிரிட்டிஷ் ஹைகமிஷனர்

லண்டன், ஜன 11

திரு. ஜேம்ஸ் பிரீமன் இந்தியாவில் புதிய பிரிட்டிஷ் ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

## அரசாங்க சூறாவளி நிதி

கொழும்பு, திங்கள்

அரசாங்கம் ஆரம்பித்துள்ள சூறாவளி நிவாரண நிதிக்கு இதுவரை ரூபா 6,33,000 சேர்ந்துள்ளது. இதில் இக் காரிய தூதராலயத்தின் மூலம் ரூபா 1,19,00 வழங்கப்பட்டது.

---

## பூட்டோ

கராச்சி, ஜன, 11

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு பூட்டோ ஐ. நா. கூட்டத்திற்காக நியூயோர்க் செல்லும் வழியில் மாஸ்கோ, ரோம், லண்டன் ஆகிய நகரங்களுக்குச் செல்வதற்காக இன்று புறப்பட்டார்.

---

## மாதம் ரூ 25 உதவும் புண்ணியம்

பருத்தித்துறை, நாகர் கோவில், தாளையடி, வல்வெட்டித்துறை, டலவி, மயிலிட்டி, குடத்தனை, சற்கோவரம், மருதங்கேணி வந்திராயன் உடுத்துறை, ஆழியவளை, செம்பியன்பற்று முதிய பல இடங்களில், சூறாவளியால் நிர்க்கதியான சுமார் 100-க்கு மேற்பட்ட குடும்பங்கள் தவிக்கின்றன. மாதம் ரூபா 25 வீதம் உதவிப் பணமாக சில காலத்துக்கு அவர்களுக்கு கொடுத்தால் அது பெரும் புண்ணியமாகும். அவ்விதம் கொடுக்கக் கூடிய புண்ணியவான்களை ஆசிரியர் "ஈழநாடு" சூறாவளி கஷ்டநிவாரண நிதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தெரிவிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

---

## டட்லி

கேகாலை, திங்கள்

டெடிகமையில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு டட்லி சேனநாயக்க தம் அபேட்சா பத்திரத்தை கேகாலை கச்சேரியில் தாக்கல் செய்தார்.

---

## அலெக்ஸாண்டர் காலமானார்

லண்டன், ஜன. 11

79 வயதான அலெக்ஸாண்டர் பிரபு லண்டனில் காலமானார். இந்தியா வந்திருந்த கிரிப்ஸ் தூதுகோஷ்டியில் அவர் ஒரு அங்கத்தினராய் இருந்தார்.

---

## அறிவித்தல்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பாலர் பாடசாலை (Nursery) ஜனவரி மாதம் 13-ந் திகதி புதன் கிழமை ஆரம்பமாகும். விண்ணப்பங்களுக்கு திருமதி ஏ. இராஜசிங்கம், கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு மனுப்பண்ணவும். 1354

[illegible]

## பொங்கல் வாழ்த்து

பல டிசைன்களில், அழகிய வர்ண படங்கள் அடங்கிய பொங்கல் வாழ்த்து விற்பனைக்குண்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம். 1422

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள CN 1182 A 40 விற்பனைக்குண்டு. விபரங்கள்: "மல்லிகை வாசா", அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 1425

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கதறலைக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியிடும் அபேட்சகர் விபரம்

**யாழ்ப்பாணம்**
அல்பிரட் ரி துரையப்பா (சுயேச்சை), சி எக்ஸ் மார்ட்டின் (த அ), ஜி ஜி பொன்னம்பலம் (த கா)

**நல்லூர்**
டாக்டர் ஈ எம் வி நாகநாதன் (த அ), சி அருளம்பலம் (த கா) ஏ விசுவநாதன் (ல ச ச)

**உடுவில்**
வி தர்மலிங்கம் (த அ), பி நாகலிங்கம் (ல ச ச), என் சிவநேசன் (த கா)

**கோப்பாய்**
எம் பாலசுந்தரம் (சுயேச்சை), எஸ் கதிரவேற்பிள்ளை (த அ), ரி குணரத்தினம் (த கா), எம் துரைராசா (ல ச ச)

**உடுப்பிட்டி**
எம் சிவசிதம்பரம் (த கா), கே ஜெயக்கொடி (த அ), ஆர் ஆர் தர்மரத்தினம் (ல ச ச)

**பருத்தித்துறை**
கே துரைரத்தினம் (த அ), என் நடராசா (த கா), கே மோதிலால்நேரு (கம்யூ)

**காங்கேசன்துறை**
எஸ ஜே வி செல்வநாயகம் (த அ), எஸ ஸ்ரீபாஸ்கரன் (த கா), கே வைகுந்தவாசன் (கம்யூ), வி காராளசிங்கம் (சமசமாஜ), வி சீனிவாசகம் (கம்யூ. சண்)

**வட்டுக்கோட்டை**
ஏ அமிர்தலிங்கம் (த அ), ஐ ஆர் அரியரத்தினம் (கம்யூ), க சுப்பிரமணியம் (த கா), ஏ தம்பிப்பிள்ளை (சுயேச்சை)

**சாவகச்சேரி**
வி என் நவரத்தினம் (த அ), எம் சிவானந்தம் (த கா)

**கிளிநொச்சி**
க பொ இரத்தினம் (த அ) வி ஆனந்தசங்கரி (ல ச ச),

எஸ் சரவணமுத்து (ஈ த ஓ மு), வி குமாரசாமி (சுயேச்சை), எஸ் எஸ சேதுகாவலர் (சுயேச்சை), கே செல்வநாயகம் (சுயேச்சை), ஆர் வேதநாயகம் (சுயேச்சை)

**ஊர்காவற்றுறை**
வி நவரத்தினம் (த க), என் ரி சிவஞானம் (த கா),

**பட்டிருப்பு**
எஸ் எம் இராசமாணிக்கம் (த அ), எஸ யு எதிர்மன்னசிங்கம் (சுயேச்சை, காங்கிரஸ் ஆதரவு,) சின்னத்துரை (ஐ. தே கட்சி)

**கல்குடா**
பொ. மாணிக்கவாசகர் (த அ), வி கலியா (த கா) கே. டபிள்யு தெய்வநாயகம் (ஐ தே க), யூ எச் ஏ ஹனிபா யிலா (சுயேச்சை), ரஷ்மான் (சு க).

**வவுனியா**
ரி சிவசிதம்பரம் (த கா) சி சுந்தரலிங்கம் (ஈ த ஓ மு), எஸ் ஸ்ரீனிவாசன் (சுயேச்சை), வி. சிறிவர்த்தன (சுயேச்சை), ஜே. பி. வின்ஸன்ட் (த அ), வி. குணசேகரா (சுயேச்சை), டபிள்யு எஸ் பெரேரா (எம் ஈ பி)

**மட்டக்களப்பு**
செ இராசதுரை (த அ), ஜே.எஸ். திடவீரசிங்கம் (த.க.) ஜனுப் சின்னலெப்பை (ஐ தே க), விநாயகரமணி (கம்யூனிஸ்ட்) வி நடராசா (சுயேச்சை), ஏ எச் எம் மாக்கான் மரிக்கார் (சுயேச்சை), அகமட் லெசயின் (சுயேச்சை)

**ஒருவர் விலகினார்**
மட்டக்களப்புத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடவிருந்த திரு. ஹமீட் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்.

**மன்னார்**
வி. ஏ. அழகக்கோன் (த. அ), ஜோன்மார்க் (சுயேச்சை), ரஹீம் (சுயேச்சை)

**மூதூர்**
எம். ஈ எச். முகமதலி (த.அ), எஸ். எஸ். ஆறுமுகம் (த கா). ஏ. எல். எம். மஜீத் (ஸ்ரீ. ல. சு. க.) டி. எல். வீலாரத்தின (யு. என். பி.), பி. வி. போலிஸ் (ஸ்ரீ. ல. சு. க.) குணதிலகா (சுயேச்சை).

**திருமலை**
எஸ் எம் மாணிக்கராசா (த அ), ஏ. எஸ. நவரத்தினராசா (ஐ. தே. க), எஸ எச். சோமபாலா (ஸ்ரீ. ல. சு. க).

**பொத்துவில்**
எம். எஸ. காதர் (த. அ.) முஸதபா (சுயேச்சை), எம். தர்மலிங்கம் (சுயேச்சை) எம். ஏ. அப்துல்மஜீத் (சுயேச்சை), கலீமான்லெப்பை (யு. என். பி), விஜயானந்தா (எம். ஈ. பி.)

**நிந்தாவூர்**
எம். ஐ. எம். அப்துல்மஜீத் (சுயேச்சை) எம், எம், முஸதபா (யு. என். பி.)

**அம்பாறை**
எஸ. சோமரத்தின (ஸ்ரீ ல சு க) கே. எஸ. சுபசிங்கா (யு என் பி) எம். எஸ வக்கிவல (எம். ஈ. பி.


## விற்பனைக்கு

"A40" டெவன் EY சீரிஸ் கார். யாழ்ப்பாணம், மெயின் வீதி, 133-ம் இலக்கத்தில் பார்வையிடலாம். 1428


## அறிவித்தல்

பிரவேச பாலபண்டித வகுப்புகள், 18-1-65-ல் தொடங்கி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஷ வகுப்புகள் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் நடைபெறும்.

திறமையும் அனுபவமும் வாய்ந்த பேராசிரியர்கள் படிப்பிப்பார்கள். இவ்வகுப்புகளிலே சேர்ந்து படிக்க விரும்புபவர்கள் பண்டிதர் அ. ஆறுமுகம், பண்ணாகம், சுழிபுரம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். தமிழ்ச் சங்கம், வட்டுக்கோட்டை. 1429

## மரண அறிவித்தல்

ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் விதானை திரு பூ சிவசம்பு சிவபதம் அடைந்துவிட்டார். இவர் முன்னாள் கிராமத் தலைமைக்காரரான திரு. ச. மண்டலநாயகம் அவர்களின் சிறிய தந்தையும், இரத்தின தேவியின் மாமனாரும், பேராதனை பல்கலைக் கழக மாணவர்கள் பத்மலோஜனி, செல்லப்பா, ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவர்களான ஞானசம்பந்தன், விக்னேஸ்வரன், கோணேஸ்வரன், கமலலோஜனி, தோஷை அம்பிகை, கனிலோஜனி ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் தகனக்கிரியை இன்று பிற்பகல் 4-30 மணிக்கு கன்னாகம் மயானத்தில் நடைபெறும். 1430

## ஆண்டுவிழா

பண்ணாகம், திங்கள்

பண்ணாகம் தெற்கு விசவர்த்தனை முருகமூர்த்தி கோவிலில் இம் மாதம் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் பஜனை ஆண்டு விழாவுக்கு திரு. கே. பி. ஹரன் தலைமைதாங்கவிருக்கிறார். அன்றைய தினம் திரு. கே. வி. ஆறுமுகம் கோஷ்டியினரின் "பக்த நந்தனார்" என்னும் பொருள்பற்றிய வில்லுப்பாட்டு நடைபெறவிருக்கிறது.

# சபாநாயகர் போட்டியிடவில்லை

கொழும்பு, திங்கள்

வென்னப்புவத் தொகுதியில் முன்னாள் சபாநாயகர் திரு. ஹியூ. பெர்னாண்டோ கடைசி நேரத்தில் போட்டிக்கு நிற்கவில்லை.

முதலில் தாம் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என திரு. பெர்னாண்டோ அறிவித்திருந்தார். எனினும் பின்னர் தாம் சுயேச்சையாகப் போட்டியிடப்போவதாகத் தெரிவித்தார். ஆனாலும் இறுதி நேரத்தில் அவர் தமது அபேட்சாபத்திரத்தைத் தாக்கல் செய்யவில்லை.

**எட்டியாந்கோட்டை**
டாக்டர் என் எம் பெரேரா (ல ச க), ஜோர்ஜ் கொத்தலாவல (ஐ தே க), கே விஜயசேகரா (எம் ஈ பி ஜே வி பி)

**ருவன்வலை**
பி சி இம்புலான (ஐ தே க), அத்தோட செனிவரத்ன (ல ச க),

**தெகியோவிட்ட**
தனபால வீரசேகரா (ல ச க) கபிலசேன ரத்நாயக (ஐ தே க), யு ஈ பெரேரா (எம் ஈ பி-ஜே வி பி)

**கிரியலை**
பி பி விஜயசுந்தரா (ல ச க), ஏ ஈ பி கிரியல (ஐ தே க), எச் ஏ பிரேமரத்ன (எம் ஈ பி-ஜே வி பி), யு டி குலசிங்கா (ஸ்ரீல சு சோ க),

**இரத்தினபுரி**
ஏ ஜெயவர்த்தன (சு க), டி பி அட்டிகல (ஐ தே க) ஏ, விஜயரத்ன (ஸ்ரீல சு சொ க).

**பெல்மதுலை**
டபிள்யு ஏ கருணசேன (ஸ்ரீ ல சு க), திருமதி சீந்தா செனிவரத்ன (யு என் பி), கே டி ஜோதிபாலா (எம் ஈ பி - ஜே வி பி), பி ஏச் கே ஏ ரணசிங்கா (ஸ்ரீ ல சு சோ க)

**சிலாபம்**
எஸ டி ஆர் ஜெயரத்ன (ஸ்ரீ ல சு க) சேர்லி கொரியா (யு என் பி), ஜே சி டபிள்யு முனசிங்கா (சு), எம் எம் அதிகாரி (ஸ்ரீ ல சு சோ கட்சி)

**யப்பகூவா**
யு பி வின்னிநாயகா (யு என் பி), டி ஆர் பலேவி (ஸ்ரீ ல சு க) எச் பி கெலிகம (எம் ஈ பி - ஜே வி பி), என் டபிள்யு அபயவர்தன (சு)

**புத்தளம்**
எம் ஏச் எம் நைனா மரிக்கார் (யு என் பி), எஸ எம் அபுதாகிர் (ஸ்ரீ ல சு க)

**காலி**
டபிள்யு தககாயகா (ஸ்ரீ ல சு சோ க), டபிள்யு டி விஜயகுல சூரியா (ஸ்ரீ ல சு க), டபிள்யு டி எஸ அபயகுண வர்தன (சு)

**அக்குரஸ**
டாக்டர் எஸ ஏ விக்கிரமசிங்கா (கம்யூ.) லெப்டினட் கேர்னல் சி ஏ தர்மபால (யு என் பி), எம் ஏச் டி கருணதாசா (எம் ஈ பி--ஜே வி பி)

**மாத்தறை**
மகாநாம சமரவீரா (ஸ்ரீ ல சு சோ க), பி வை துடவ (கம்யூ)

**அத்தனகலை**
திருமதி சிறிமா பண்டாரநாயகா (ஸ்ரீ ல சு க), ஏ டபிள்யு ஜி செனவரத்ன (யு என் பி), ஜே கஸதூரியாராய்ச்சி (எம் ஈ பி ஜே வி பி), விஜயதுங்கர (சு), ரட்ணசேகரா.

**கம்பகா**
எஸ டி பண்டாரநாயகா (ஸ்ரீ ல சு த), கே எம் யு ஜயனெட்டி (எம் ஈ பி ஜே வி பி), டி ஈ செனிவிரத்தின (சு).

**மகார**
எஃ கே கே சூரியராச்சி (ஸ்ரீ ல சு க), டி எஸ குணசேகரா (யு என பி), எப் ஆர் ஜே பீரிஸ (சு),

**தோம்பே**
பீலிக்ஸ டயஸ பண்டாரநாயகா (ஸ்ரீ ல சு க), ஐ என் பி சூரியபெரும (யு என பி), ஐ டி டின்லி (சு)

**களனி**
ஆர் எஸ பெரேரா, ஏ டபிள்யு ஏ அபயகுணசேகரா,

**பொரலை**
விவியன் குணவர்த்தன (ல ச ச), எம் எச் மூகமத் (யு என் பி), பிரஜபால ஸ்ரீ குணவர்த்தன (எம ஈ பி ஜே வி பி) டி வி அபயவர்த்தன (சு)

**வத்தளை**
ஷெல்டன் ஜயசிங்கா (யு என் பி), டாக்டர் ஏ டி ஜேலியோ (ஸ்ரீ ல சு க), பி ஜி பி ஜோசப (எம் ஈ பி-ஜே வி பி)

**நீர்கொழும்பு**
குயின்டின் பெர்னாண்டோ (யு என் பி), பெர்னார்டகுரேரா

**கடான**
டி வி ஜயபாலா மென்டிஸ (யு என் பி), டாக்டர் ஹெக்டர் பெர்னாண்டோ (ல ச ச), டபிள்யு எஸ் பெர்னாண்டோ (எம் ஈ பி)

**அவிசாவளை**
பிலிப் குணவர்த்தன (எம் ஈ பி), திருமதி சோமாவிக்ரம நாயகா (ஸ்ரீ ல சு க),

**ஹேவாகெட்ட**
டி பி இலங்கரத்தின (ஸ்ரீ ல சு க), எம் ஏ டானியல் அப்புகாமி (யு என் பி)

**புலத்சிங்கள**
எட்மன் சமரக்கொடி (ல ச ச புரட்சி), டபிள்யு எம் பொன்சேகரா, மங்களா முனசிங்கா (ல ச ச), திருமதி ஆர் எஸ் ரத்நாயகா (ல-சு சோ க), டி டி வியனகே (எம் ஈ பி)

**களுத்துறை**
சம்லி குணவர்த்தன (ல ச க), கிங்ஸலி விக்ரமசிங்க (யு என் பி)

**அகலவத்தை**
அனில் முனசிங்கா (ல ச ச), பி டேவிட் (எம் ஈ பி).

**கேகாலை**
பி பி ஜி கலுகல்லே (சு க), சிமால் கருணதிலகா (யு என் பி), திருமதி கே ஏ கருணவதி, கொடிசிங்கா (சு)

**ரம்புக்கனை**
அசோகா கருணரத்ன (ஸ்ரீ ல சோ), ஏ முத்துநாயகா (சு க) ஆர் எம் ஜி ராஜபக்ஷ (சு)

**மாவனல்ல**
பி ஆர் ரத்நாயகா (சு க), சி ஆர் பெலிகமான (யு என் பி), எஸ டி ஜசமன் பெரேரா (எம் ஈ பி-ஜே வி பி)

**மினிப்பே**
ஏ பி கஜுநாதிலகா (யு என் பி), எச் எம் நவரத்தினே (ஸ்ரீ ல சு க), நிஸங்கா கன்டாராச்சி (எம் ஈ பி)

**நாவலப்பிட்டி**
ஆர் எஸ பெல்பொல (ஸ்ரீ ல சு க), சந்திரா கருணாரத்ன (யு என் பி)

**கொத்மலே**
ஜே டி வீரசேகரா (ஸ்ரீ ல சு க), டி பி ரணதுங்க (யு என் பி) எம் எஸ இகொடவெல (ஸ்ரீ ல சு சோ)

**நுவரெலியா**
டி வில்லியம் பெர்னாண்டோ (ஸ்ரீ ல சு க), டொனாட் ஜே ரணவீர (யு என் பி)

**குலகதெர**
திருமதி தாமரகுமாரி இலங்கரத்தின (ஸ்ரீ ல சு க), பி பி ஹெரத் (எம் ஈ பி-ஜே வி பி) டபிள்யு எம் ஜி ரி (யு என் பி) ஏ எஸ ஜி கருணாதிலகா (எம் ஈ பி)

**அக்குரணை**
டி ஜி எச் சிறிசேன (ஸ்ரீல சு க) ஏ ஸி எஸ ஹமீட் (யு என் பி) எல் ஜினதாச (யு என் பி)

**கண்டி**
ஈ எல் சேனநாயகா (யு என் பி), ஜி பி டி சில்வா (ஸ்ரீ ல சு க)

**கொட்டாவ**
டி பி ஆர் குணவர்த்தன (எம் ஈ பி) எம் டி எச் ஜயவர்த்தன (எம் ஈ பி), எம் டி எச் ஜயவர்த்தன (யு என் பி), சந்திராகுணசேகரா (ல ச க), டி பி வெரகர (சு)

**பாணந்துறை**
லெஸலி குணவர்த்தன (ல ச க), லேடிசு சுந்தாடி பொன்சேகா (யு என் பி)

**வேருவளை**
ஐ ஏ காதர் (ஸ்ரீ ல சு க), பகீர் மார்க்கார் (யு என் பி) அல்டைன் ஜயசிங்கா (எம். ஈ பி)

**பத்தேகம**
நீல் அல்விஸ (ல ச க), ஈ டி விக்ரமதிலக (ஐ தே க), சிறில் எக்கநாயகா (எம் ஈ பி—ஜே வி பி)

# தமிழில் அரசாங்க வர்த்தமானி தருமாறு கோரிய அபேட்சகர்
## தேர்தல் அதிகாரி ஏற்றார்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி தொகுதி அபேட்சா பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோது தேர்தல் பற்றிய விசேட அரசாங்க வர்த்தமானி பிரதிகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே அபேட்சகளுக்கு வழங்கப்பட்டன என்றும் இதைத் தாம் ஆட்சேபித்து தமக்கு தமிழின் அரசாங்க வர்த்தமானியின் பிரதியைத் திருமாறு கேட்டுக்கொண்டதாகவும் திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

தேர்தல் அதிகாரி இந்த வேண்டுகோளை மேலிடத்துக்கு அறிவித்து ... கொடுக்க முயல்வதாக உறுதி கூறினார். இதர அபேட்சகர்களும் தங்களுக்கு தமிழில் தருமாறு கேட்டுக்கொண்டனர்.

தேர்தல் ஏஜெண்ட் (முகவர்) நியமிக்கும் பத்திரம் முதலியன ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டதாயும் திரு. இரத்தினம் இதைச் சுட்டிக் காட்டி தமக்கு தேர்தல் சம்பந்தமாக அனுப்பப்படும் பத்திரங்களும் தமிழில் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதுடன் தமிழிலேயே தன் பத்திரத்தை நிரப்பிக் கொடுத்தார். ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட பத்திரங்களை எல்லாம் தமிழிலேயே தாம் நிரப்பிக்கொடுத்ததாயும் அவர் கூறினர்.

# கேகாலையில் கைகலப்பு

கொழும்பு, திங்கள்

கேகாலை கச்சேரிக்கு முன்னால் இன்று திரண்டிருந்த ஜனக்கூட்டத்தில் யு. என் பி. ஆதரவாளர்களுக்கும், சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் சிலர் சிறிது காயமடைந்தனர்.

# மந்திரியின் 6 வருட திட்டம்

கொழும்பு திங்கள்

கைத்தொழில் வளர்ச்சிக்கு வகை செய்யுமுகமாக கைத்தொழில் மந்திரி திரு மைத்திரிபாலசேனநாயகா 6 வருட திட்டமொன்றை உருவாக்குவதில் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்தி ... ஜன அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org